பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

அன்பளிப்பு

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 பங்குனி 23 வெள்ளிக்கிழமை (05-04-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 130

# சண்டிலிப்பாயில் உக்கிரச் சண்டை!

# அதிகாரி உட்பட 7 படையினர் பலி!!

## இரண்டு அதிகாரிகளும் மற்றும் 14 இராணுவத்தினரும் படுகாயம்

கொழும்பு, ஏப்ரல். 5

ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் உள்ள வலிகாமம் சண்டிலிப்பாய் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற கடும் சண்டையில் ஓர் அதிகாரி உட்பட ஏழு இராணுவத்தினர் உயிரிழந்தனர். இரு அதிகாரிகள் உட்பட 16 படையினர் படுகாயமடைந்தனர்.

கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

வலிகாமம் பகுதியில் படையினர் தற்போது மேற்கொண்டு வரும் ''சூரியப் பிரகாசம்-5'' இராணுவ நடவடிக்கையின் ஒரு கட்டத்திலேயே சண்டிலிப்பாய், சங்கரத்தை, மானிப்பாய் பகுதிகளில் மோதல்கள் இடம்பெற்றதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

சண்டிலிப்பாயில் ஆலயம் ஒன்றின் அருகே நடந்த சண்டை ஒன்றிலேயே அதிகாரி ஒருவர் உட்பட ஏழு இராணுவத்தினர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

போராளிகள் தரப்பில் 41 பேர் உயிரிழந்ததாகவும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அதனை ஊர்ஜிதப்படுத்தும் செய்தி ஏதும் வெளியிடப்படவில்லை.

இராணுவ நடவடிக்கை இடம்பெறும் பகுதியில் சிக்கிக் கொண்டிருக்கும் தமிழர்களை இராணுவம் கொன்றுவிட்டு புலிகளைக் கொன்றதாகக் கணக்குக் காட்டக் கூடும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

மோதல் நடந்ததாகக் கூறப்படும் பகுதிகளில் கணிசமான எண்ணிக்கையில் மக்கள் சிக்குண்டிருந்தனர் என்பது தெரிந்ததே.

(உ-3-6-7-8)

## வலிகாமம் நடவடிக்கை முடிந்ததும் வடமராட்சியில் தாக்குதல் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 5

வலிகாமத்தில் தற்போது மேற்கொள்ளப்படும் ''சூரியப் பிரகாசம்-5'' இராணுவ நடவடிக்கையின் பின்னர் வடமராட்சிப் பகுதியைக் கைப்பற்றுவதற்கான பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படும்.

இராணுவப் பேச்சாளர் ஒருவர் இவ்வாறு தகவல் வெளியிட்டதாக ''திவயின'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையை நெறிப்படுத்துவதற்காக, வடக்கு — கிழக்கு இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான கட்டளை அதிகாரியும் பதில் இராணுவத் தளபதியுமான மேஜர் ஜெனரல் றோஹான் தளுவத்த கடந்த செவ்வாயன்று பலாலி சென்றார்.

வலிகாமம் மேற்கில் உள்ள மானிப்பாய், வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் தமது கட்டுப்பாட்டை ஸ்திரப்படுத்துவதற்காக இந்த

(3 ஆம் பக்கம் பார்க்க)

## படையில் சேர சிங்களவர் தயக்கம்; ஆனால் போரில் தலைவர்கள் தீவிரம்

### பிரபல சிங்கள விமர்சகர் விவரிப்பு

கொழும்பு, ஏப்.5

இராணுவத்தில் சேர முன்வருமாறு ஸ்ரீலங்கா அரசு தொடர்ந்து விடுத்து வரும் அழைப்பை சிங்கள இளைஞர்கள் ஏற்பதாயில்லை: நிராகரித்து வருகின்றார்கள். ஆனால் போரைத் தொடர்ந்து இராணுவத் தீர்வைக் காணும் முயற்சியில் சிங்களத் தலைவர்களும் பௌத்த மத பீடத்தினரும் தீவிரம் காட்டி வருகின்றார்கள்.

— இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பிரபல செய்தியாளர் லூஸியன் ராஜ கருணநாயக்கா.

ஜேர்மன் வானொலியின் கொழும்புச் செய்தியாளரான அவர், ''ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு ஆள் சேர்ப்பு'' குறித்து ஜேர்மன் வானொலிக்கு வழங்கிய செய்திக் கண்ணோட்டத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அதில் மேலும் தெரிவித்தாவது:

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர் நிலை குறித்து ஜெயலலிதா கவலை

இலங்கை தமிழினம் சீரழிந்து வருவது எமக்கு சொல்லொணாத்துயரை தருகிறது. அவர்களது உரிமைகளை நிலைநாட்டி அவர்கள் கௌரவமான வாழ்வை அமைக்கவே நாம் விரும்புகிறோம். இதற்காக மத்திய அரசாங்கத்துடன் வாதாடி உதவிகளைப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்வோம்.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆளும் காங்கிரஸ் கட்சியுடன் தேர்தல் உடன்பாடு ஏற்படுத்திய பின்னர் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார். (இ-3)

## வலிகாமம் கிழக்கில் ஹெலி, ஷெல் தாக்குதல்

சாவகச்சேரி, ஏப். 5

வலிகாமம் கிழக்கில் நேற்று ஹெலிக்கொப்டர் தாக்குதலும், ஷெல் தாக்குதல்களும் பெரும் அளவில் இடம்பெற்றன. அத்துடன் குண்டு வெடிப்புச் சத்தங்களும் அதனைத் தொடர்ந்து புகைமண்டலமும் காணப்பட்டன.

வாதரவத்தைப் பகுதியிலேயே ஹெலிக்கொப்டர், றொக்கட் தாக்குதலை நடத்தியது.

ரஷ்ய தயாரிப்பு எம். ஐ. 24 ஹெலிக்கொப்டர் இடி முழக்கம் போன்ற பெரும் சத்தத்துடன் குண்டுகளை வீசியது. ஒரே தடவையில் ஆறு, ஏழு குண்டுகளை ஹெலி வீசியது. அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ஷெல் தாக்குதல்கள் காரணமாக அந்தணர்திடல், கப்பூது பகுதிகளில் மக்கள் சிலர் இடம்பெயர்ந்தனர்.

குண்டுச் சத்தங்களைத் தொடர்ந்து அச்சுவேலி, புத்தூர், ஆவரங்கால் பகுதிகளில் புகை மண்டலங்கள் காணப்பட்டன. படையினர் கட்டடங்களையும், வீடுகளையும் குண்டு வைத்துத் தகர்த்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

(இ-15—173-13-80)

## கொழும்பில் பாதுகாப்பு

கொழும்பு, ஏப். 5

வலிகாமம் பகுதியில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதை ஒட்டி தலைநகர் கொழும்பில் பாதுகாப்பு மேலும் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்தார். (உ-6)

## தீர்வுத் திட்டம் அமுலானால் 2 வருடங்களில் போர் முடிவு

### சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு, ஏப். 5

தமிழர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் அல்லர். தீர்வுத் திட்டம் அமுல் செய்யப்பட்டால் இரு வருடங்களில் யுத்தம் முடிவடையும்''

இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மீனவர் காப்புறுதி வழங்கும் வைபவத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார். (இ-3)

## ஸ்ரீமாவோவுக்கு ஆதரவாக அனுரா வாக்களிப்பார்

1980 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி எனது தாயாரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமை பறிக்கப்பட்டபோது அதனை நான் எதிர்த்தேன். இப்போது பறிக்கப்பட்ட சிவில் உரிமையை வழங்குவதற்கு நாடாளுமன்றத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி பிரேரணை ஒன்று கொண்டுவரப்படவிருக்கிறது. அதனை நான் நிச்சயம் ஆதரிப்பேன். எனது இந்த நிலைப்பாட்டை ஐ. தே. க. தலைவருக்கு கூறியுள்ளேன்.

இப்படி ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க கூறினார்.

(இ-3)

## தபாலகம் இயங்குவதில் மேலும் தாமத நிலை

சாவகச்சேரி, ஏப். 5

யாழ். பிரதம தபால் அலுவலகத்தை முன்னர் அது இயங்கி வந்த இந்து மகளிர் மகாவித்தியாலயத்துக்கு முன்னால் உள்ள கராஜில் இயக்க முடிவு செய்த போதிலும், போதியளவு தளபாடங்கள் இன்மையால் அது தொழிற்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

[illegible] தபாலகம் கடந்த புதன்கிழமை தொடக்கம் மீண்டும் இயங்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் தளபாட வசதியின்மையால் அதனை இயங்க வைக்க முடியாதுள்ளதாகவும் —

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இயங்க வைக்க தன்னாலான சகல முயற்சிகளையும் எடுத்து வருவதாகவும் —

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் உறுப்பினர் சுட்டுக்கொலை

சாவகச்சேரி, ஏப். 5

விடுதலைப்புலிகளின் தாக்குதலில், செங்கலடி — பதுளை வீதியில் வைத்து, புளொட் தேசத்துரோகிகள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்று புலிகளின் குரல் வானொலி நேற்றுத் தெரிவித்தது.

வாலி, நாதன் ஆகிய இருவருமே மேற்படி சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-8)

## கிருலப்பனையில் 18 பேர் கைது

கொழும்பு, ஏப். 5

கொழும்பு, கிருளப்பனையில் நேற்று முன்தினம் பொலிஸாரும், புலனாய்வுப் பிரிவினரும் கூட்டாக நடத்திய தேடுதலின் போது, விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்படும் 18 பேர் கைது செய்யப்பட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

## நோயாளருடன் ஹபரண [illegible]

வடமராட்சி, [illegible]

ஹபரண கப்பல் [illegible] நோயாளர்களுடன் [illegible] பிற்பகல் பருத்தித்துறை[illegible]ருந்து திருகோணமலை[illegible] புறப்பட்டுச் சென்றது[illegible]

(இ[illegible]

## பொறிவெடிய[illegible] தமிழர் காயம்

சாவகச்சேரி, ஏப். 5

கடந்த திங்களன்று மட்டக்களப்பு மயிலம்பாவெளியில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் பொறிவெடியில் சிக்கி தமிழர் ஒருவர் கடும் காயங்களுக்கு உள்ளானார். (இ-8)

## விமான விபத்து: அமெரிக்க அமைச்சரும் பலி

லண்டன், ஏப். 5

அமெரிக்க விமானப் படையின் விமானம் ஒன்று குரோஷியன் நகரம் ஒன்றில் நேற்று முன்தினம் விழுந்து நொறுங்கியதில் அதில் பயணம் செய்த அமெரிக்க வர்த்தக அமைச்சர் றொம்பிறவுன் மற்றும் அமெரிக்க சிரேஷ்ட அதிகாரிகள் உட்பட அந்த விமானத்தில் இருந்த 33 பேரும் உயிரிழந்ததாக அறிவிக்கப்படுகிறது. (உ)

## மின் பொறியியலாளர் கண்டனம்

ஸ்ரீலங்காவில் மின்வெட்டு வரும் என்று எச்சரிக்கை தெரிவித்து, அதைத் தவிர்ப்பதற்கு முன்னேற்பாட்டு நடவடிக்கை எடுக்குமாறு கடந்த ஒன்றரை வருடங்களாக தாங்கள் விடுத்து வந்த கோரிக்கையை அரசு உதாசீனம் செய்ததாலேயே தற்போதைய நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கின்றது.

மின்சார சபைப் பொறியியலாளர் சங்கம் ஸ்ரீலங்கா அரசு மீது இவ்வாறு குற்றம் சுமத்தியிருக்கின்றது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

1½ அங். கனம், 10 அடி நீளம், 2½ அடி அகலம் கொண்ட முதிரை, மலை வேம்பு, தேக்கு பலகைகள், பியர், கொக்கோ கோலா போத்தல்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: மா. அரியரத்தினம், சந்தா தோட்டம், புலோலி கிழக்கு, புலோலி. (41300)

40W சோலார்+120 A.M. பற்றறியுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- No 19, தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (41413)

புத்தம் புதிய EGK 600 ஹொண்டா ஜெனரேற்றர் (500W), CG 125, வூல்சிவி நீரிறைக்கும் இயந்திரம், புத்தம் புதிய ஒறிஜினல் பெற்றோமக்ஸ் (ஜேர்மன்), மின் உபகரணங்கள் விற்பனைக்குண்டு. வே. ஆறுமுகம் மே/பா S. சிவராஜா, பன்றித்தலைச்சி அம்மன் கோவிலடி, மட்டுவில். (41409)

## வாடகைக்கு

பொருள்கள் வாடகைக்கு கொடுக்குமிடம். பீங்கான், ரம்லர், தண்ணீர் ரம்லர், ஐஸ்கிறீம் கப்ஸ், பிளாஸ்ரிக் பாய்கள், சில்வர் றே, கறி வாளிகள், கறி டிஸ்கள், பந்திப்பாய், கிடாரங்கள், சமையல் பாத்திரங்கள், தண்ணீர் பரல் இன்னும்பல. வெள்ளை [...]ளிகை, பெரிய அரசடி, [...]கத்தானை. (41147)

## உணவுப் பார்சல்கள்

[...]ஜெசித்தாராவின் உணவுப் [...]கள் தினமும் பிற் [...]ல் 12-00 மணி முதல் 3-00 [...]ணி வரை. உங்களுக்கு அடக்கமான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம். ஜெசித்தாரா, (தேசியசேமிப்பு வங்கி முன் ஒழுங்கை), கண்டி வீதி, சாவகச்சேரி. (41264)

## தேவை

ஹோர்லிக்ஸ், வீவா, ஜாம் போத்தல்கள் கொள்வனவு செய்யப்படும். சோழன் யவற்றுப்பொருள் வாணிபம், ஒழ்சாலை, சாவகச்சேரி. (41274)

50 லீற்றர், 100 லீற்றர் அதற்கு மேற்பட்டவை என்றாலும் பரவாயில்லை. பிளாஸ்ரிக்பைவர்கள் தேவை: பைவருக்கேற்ப விலை தரப்படும். உடன் தொடர்பு கொள்ளவும்; வெள்ளை மாளிகை, பெரிய அரசடி, சங்கத்தானை. (41320)

## காணவில்லை

திருமதி
இராசரத்தினம்
அருமைநாயகி

தாவடி வடக்கைச் சேர்ந்த விசுவலிங்கம்-இராசரத்தினத்தினுடைய மனைவி அருமைநாயகி என்பவரை **5-11-95** இல் இருந்து காணவில்லை. அவர் காணாமல் போன அன்று மீசாலை மேற்கு விக்கினேஸ்வரா பாடசாலையில் தங்கியிருந்தார். வயது சுமார் 53 மெல்லிய தோற்றமும், வெள்ளை நிறமுமுடையவர், மனநோயாளி போல் காணப்படுவார். அவரை காணாது குடும்பம் தவிக்கிறது. அவரைக் கண்டவர்கள் அல்லது அவர் பற்றிய விவரங்களை தருபவர்களுக்கு இயன்றளவு சன்மானம் வழங்கப்படும். தயவு செய்து மனிதநேயத்தின் பேரில் தாமதியாமல் உடன் நடவடிக்கையில் ஈடுபடும்படி கேட்டுக்கொள்கின்றேன். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

வி. இராசரத்தினம்,
காட்டு வளவு
முருகன் கோயில்,
மீசாலை கிழக்கு,
மீசாலை.
(41410)

# 31-ம் நாள் நினைவஞ்சலி
## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

நல்லூர்

### அமரர் தங்கம்மா நாகலிங்கம்

மண்ணில் **15-4-1911** — சிவனடியில் **6-3-1996**

அன்பின் திருவுருவாய், பாசத்தின் சிகரமாய், பண்பின் உறைவிடமாய் தாய்க்கு எடுத்துக்காட்டாய் இருந்து எம்மை ஆறாத்துயரில் விட்டு சிவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறோம்.

எமது தாயாரின் மறைவின் போதும், இறுதி ஊர்வலத்தின் போதும், வருகை தந்து எமது துயரில் பங்குகொண்டோர், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய (சமூக அபிவிருத்தி மன்றத்தினருக்கும்) எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று **5-4-96** வெள்ளிக்கிழமை காலை **11** மணிக்கு நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
43, செட்டித்தெரு, நல்லூர்.

திருமதி. சிவயோகம் சிவசிங்கம்,
திருமதி. நவநீதம் ஜெகதீசன்,
மே/பா, இராசையா,
தாவளை, இயற்றாலை,
கொடிகாமம். (41091)

# SCIENCE FACULTY BOARD MEETING
UNIVERSITY OF JAFFNA

The Meeting of the Faculty Board of Science will be held on Wednesday 10-04-96 at 10.00 am in the Library Block of the Chavakachcheri Hindu College.

Dean
Faculty of Science
(C/4167)

உங்கள் போஷாக்கை உறுதி செய்கிறது

# ஜீவாகாரம்

இது முன் கூட்டியே தயாரிக்கப்பட்ட ஓர் உப உணவாகும். வளர்ந்து வரும் குழந்தைகள் முதல் பெரியோர் வரை பாவிக்கக் கூடியது ஜீவாகாரம்

தயாரிப்பாளர்:-
**அண்ணா தொழிலகம்,**
மீசாலை.
(C/4165)

## சமூக அபிவிருத்தி மன்ற
# விசேட பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் **07-04-96** ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் பணிப்பாளர்கள், பணியாளர்கள், கழக நிர்வாக உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமூகம் கொடுத்து ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி.

நிர்வாகச் செயலாளர்
[41412]

# முக்கிய அறிவித்தல்

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு **1996-04-07** ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சகல வணிக நிலையங்களையும் திறந்து வியாபாரம் செய்யலாம்.

**குறிப்பு:**

சித்திரைப் புத்தாண்டுத் தினமான **13-04-1996** ஆம் திகதி சனிக்கிழமை கைவிசேஷ வியாபாரத்திற்காக வணிக நிலையத்தை குறித்த நேரத்திற்கு திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட
வணிகர் கழகங்களின் இணையம்
(சி-4166)

## 2 ஆம் ஆண்டு
# நினைவுப் பூக்கள்

மண் மகிழ 08 — 12 — 1932



கண் நெகிழ 28 — 03 — 1994

### திருமதி பரமேஸ்வரி கனகலிங்கம்
(முன்னாள் ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் ம. வி.)

திதி
**05 - 04 - 1994**

பேராண்ட பெண்மைப் பெருந் தாயே
— பெற்றவரின்
சீராண்ட செம்மைச் செல்வமே சிறப்பாலே
ஊராண்ட உத்தமியே உன்னை நாமிழந்து
ஈராண்டு ஓடியதோ என்றும் எம் மனதில் நீ!

— குடும்பத்தினர்

பெரிய மாவடி,
சாவகச்சேரி.
05 - 04 - 96
(41296)

உ

பொலிகண்டி கந்தவனக் கடவை
சுப்பிரமணியர் தேவஸ்தான

# இலட்சார்ச்சனை பெருவிழா - 1996

காலம்: **05-04-96** முதல் **07-04-96** வரை

கிரியா நிகழ்வுகள்

**05 - 04 - 96** வெள்ளிக்கிழமை:
மாலை **3** மணி - பூர்வாங்க கிரியை

**06 - 04 - 96** சனிக்கிழமை:
காலை **8** மணி முதல் - இலட்சார்ச்சனையும் ஹோமமும்.

**07 - 04 - 96** ஞாயிற்றுக்கிழமை:
காலை **7** மணி - சண்முகப்பெருமானுக்கு சகஸ்ர சங்காபிஷேகம் நடைபெறுவதுடன் எம்பெருமான் வீதியுலா வரும் நிகழ்வும் இடம் பெறும்.

பங்கு பற்றும் குருமார் விவரம்:

சிவப்பிரம்ம ஸ்ரீ தா. மஹாதேவக்குருக்கள்
(இணுவில் தர்ம சாஸ்தா குருகுலம்) தலைமையில் நடைபெறும்.

பிரதம சிவாச்சாரியார்: சிவபிரம்மஸ்ரீ கிரியாசிரோன்மணி ராம் கெங்காதரக்குருக்கள்
(சாரதாபீடம், அல்லையம்பதி)

சிவபிரம்மஸ்ரீ சி. பாலசண்முகக் குருக்கள்
சிவபிரம்மஸ்ரீ ச. பாலசுந்தரக் குருக்கள்
சிவபிரம்மஸ்ரீ வ. ராஜேஸ்வரக் குருக்கள்
சிவபிரம்மஸ்ரீ சோ. வரதராயக் குருக்கள்
சிவபிரம்மஸ்ரீ சி. சோமசுந்தரக் குருக்கள்
சிவபிரம்மஸ்ரீ கி. வைத்தீஸ்வரக் குருக்கள்
சிவபிரம்மஸ்ரீ ச. ராஜாஜி குருக்கள்
சிவபிரம்மஸ்ரீ ச. ராதாகிருஷ்ணக் குருக்கள்
சிவபிரம்மஸ்ரீ பாலகுருசாமிக் குருக்கள்
சிவபிரம்மஸ்ரீ கு. குமாரக் குருக்கள்
சிவபிரம்மஸ்ரீ சி. நித்தியானந்தக் குருக்கள்
சிவபிரம்மஸ்ரீ கு. மணிக்குருக்கள் (சங்கத்தானை)

சாதகாசிரியர்:

பிரம்மஸ்ரீ பா. வசந்தராஜ சர்மா

உதவிக் குருமார்கள்

பிரம்மஸ்ரீ சி. சுரேஸ்வர சர்மா
பிரம்மஸ்ரீ சோ. கேதீஸ்வர சர்மா
பிரம்மஸ்ரீ சாமி. சக்திதாஸ சர்மா
பிரம்மஸ்ரீ வி. ப. சசிவர்ண சர்மா
பிரம்மஸ்ரீ வி. ப. செல்வம் சர்மா
பிரம்மஸ்ரீ வி. ப. ராஜன் சர்மா
பிரம்மஸ்ரீ கு. வித்தியானந்த சர்மா

ஈழத்தின் புகழ் பெற்ற நாதஸ்வர - தவில் வித்துவான்கள் கலந்து கொள்ளும் மங்கள வாத்தியம் இடம் பெறும்.

ஆலயக் குருக்களும்,
ஆலய தர்மகர்த்தா சபையினரும்,
இலட்சார்ச்சனை உப குழுவும்.

கந்தவனம் தேவஸ்தானம்,
பொலிகண்டி.
(41415)

# முகவரியைத் தெரியப்படுத்துதல்

ஊரெழுவைச் சேர்ந்த முன்னாள் நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளராகிய திரு. மு. இரத்தினம் அவர்களது ஆலோசனைகள் தற்போதைய சூழ்நிலையில் எமக்கு அவசியம் தேவைப்படுவதால், அவரது தற்போதைய முகவரியை எமக்கு அறியத் தந்தோ, அல்லது இயலுமாயின் எம்மை நேரில் சந்தித்தோ எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அவரை அன்பாக வேண்டுகின்றோம்.

பொறுப்பாளர்,
தமிழீழ நிர்வாக சேவை,
யாழ். மாவட்டம்,
சாவகச்சேரி.
(சாவகச்சேரி பஸ் நிலைய அருகாமை)
(C/4168)

# 31-ம் நாள் நினைவஞ்சலி

### அமரர் தங்கம்மா நாகலிங்கம்
(நல்லூர்)

சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி
திருமதி நவநீதம் ஜெகதீசன்

அவர்களின் அன்புத்தாயார் திருமதி தங்கம்மா நாகலிங்கம் 6-3-96 இல் இறைவனடி சேர்ந்தார். இவரின் ஆன்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

சமூக அபிவிருத்தி மன்றம்,
வரணி
(41411)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வெட்கக்கேடு; வெளியேறுக!

யாழ்ப்பாண மக்களை நேரில் சந்தித்து அவர்களின் நிலைமையை அறியவே விரும்புகிறேன். பாதுகாப்பு நிலைமை காரணமாக உடன் அங்கு வந்து மக்களைச் சந்திக்க முடியாதுள்ளது —

இவ்வாறு வலிகாமத்தில் இருந்து அழைத்துச் செல்லப் பட்டவர்களிடம் தனது 'கவலை'யை வெளியிட்டிருப்பவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தான்.

இது உலகத்தை ஏமாற்றுவதற்கான நீலிக் கண்ணீர், ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுத கதை!

தமிழ் மக்கள் மீது உண்மையான அக்கறையும், அவர்களின் நலனில் கரிசனையும் இருந்தால், விடுதலைப் புலிகளைச் சாட்டிக் கொண்டு, சந்திரிகா, தமிழ் மக்கள் மீது போர் தொடுத்தது ஏன்? தொடர்வது ஏன்?

வலிகாமத்தின் மீது பெரும் படையெடுப்பு ஒன்றை நடத்தினால் ஆயிரம் ஆயிரமாக தமிழ் மக்கள் மடிந்தொழிவார்கள் என்று இராணுவ ஆய்வாளர்கள் மதிப்பிட்டிருந்தது தெரிந்தும்—

யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்து அரசின் இராணுவ மேலாண்மையை நிலை நாட்டிக் காட்ட வேண்டும். என்று சந்திரிகாவுக்கு வெறிபிடித்தாடிய போது, தமிழர் நலன்கள் மீதான அக்கறை அவருக்கு எங்கே போயிற்று?

விடுதலைப் புலிகளிடம் இருந்து யாழ்ப்பாணத்து மக்களை விடுவிப்பதற்கான போர் என்று கூறி, தமிழ் மக்களை அவர்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் இருந்து விரட்டியபோது, தமிழர் மீதான கரிசனை எங்கே மரித்துப் போயிற்று?

யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் மீது, வலிகாமத்து மக்கள் மீது, சந்திரிகாவுக்கு மனதூன்றிய அக்கறையும் கரிசனையும் இருந்திருப்பின் —

அவர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் சொந்தப் பூமியை விட்டு ஏதிலிகளாக இடம்பெயர்ந்து போனதைக் கண்டதும் —

தனக்கு ஏற்பட்ட தோல்வியை, கனவான் தனமாக ஏற்றுக் கொண்டு, அங்கிருந்து தமது ஆக்கிரமிப்புப் படைகளை விலக்கி

யாழ்ப்பாண மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு வகை செய்திருக்க வேண்டாமா?

யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடியை ஏற்றி, வெளிநாடு ஒன்றை வென்று விட்ட தோரணையில் வெற்றிக் களிப்பில் — மயக்கத்தில் — திளைத்திருந்த போது — வெற்றிச் செய்திச் சுருளை மாமா அனுரத்தவிடம் இருந்து பெற்ற போது— தமிழர் மீதான கரிசனை எங்கு போனது?

அரச படைகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளதாகக் கூறப்படும் பகுதிக்கே சந்திரிகாவால் செல்ல முடியவில்லை. அதனை விட வெட்கக் கேடு வேறு என்ன வேண்டும்? வலிகாமம் ஆக்கிரமிப்பு பெரும் தோல்வி என்பதே இந்தக் கூற்றின் அர்த்தம்!

வலிகாமத்துக்குத் தாம் செல்வதற்குப் பாதுகாப்பு இல்லை என்று தமது தோல்வியை ஒப்புக்கொள்ளும் சந்திரிகா, இப்போதாவது படைகளை அங்கிருந்து வாபஸ் பெறவேண்டும். இல்லையேல் தமது இயலாமையை ஏற்றுக் கொண்டு ஆட்சிக் கதிரையில் இருந்து இறங்க வேண்டும்.

வெறும் வாய்பந்தல் போட்டு உலகத்தை எத்தனை காலத்துக்கு ஏமாற்றப்போகிறார்?

# பல்கலைக்கழக அனுமதி பெறும் தமிழ் மாணவர் எண்ணிக்கை வீழ்ச்சி

## திறமை அடிப்படையில் சித்தி அடைவோர் குறைவு

கொழும்பு, ஏப். 5

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கு தகுதி பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துவரும் வேளையில், பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை கடந்த மூன்று வருடங்களாக வீழ்ச்சி அடைந்தே வருகிறது.

போர் நிலைமைகள் காரணமாக வட பகுதியில் — குறிப்பாக யாழ். மாவட்டத்தில் — கல்வி நிலை கவலைக்குரிய விதத்தில் பாதிக்கப்பட்டிருப்பதே அகில இலங்கை ரீதியில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை குறைவதற்கு முக்கிய காரணியாக இருக்கிறது.

கொழும்பு பல்கலைக்கழக கல்வித்துறைத் தலைவர் சோ. சந்திரசேகரம் கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்றுக்கு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மாணவர்களைப் பொறுத்த வரை, மாவட்ட அடிப்படையில் பல்கலைக் கழகங்களுக்கு தெரிவாவோரின் எண்ணிக்கையை விட திறமை அடிப்படையில் அனுமதி பெறுவோரின் எண்ணிக்கையே அதிகம்.

ஆனால் போர் நிலைமைகள் காரணமாக வடபகுதி கல்வி நிலை முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு பாதிக்கப் பட்டிருக்கிறது. தமிழ் மாணவர் திறமையின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் போக்கை இது திசைமாற்றியமைத்திருக்கிறது.

1991 இல் ஆயிரத்து 194 தமிழ் மாணவர்களும், 1992 இல் ஆயிரத்து 375 தமிழ் மாணவர்களும் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றிருந்தனர்.

ஆனால் 1993 இல் 697பேர் மாத்திரமே அனுமதி பெற முடிந்தது.

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்ற மொத்த மாணவர் எண்ணிக்கையில் தமிழ் மாணவரின் எண்ணிக்கை 10 சத வீதத்துக்கும் குறைவாகி விட்டது.

1991 இல் திறமை அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிபெற்ற தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை 766 ஆகும். ஆயினும் இந்த எண்ணிக்கை 1993 இல் 296 ஆக குறைந்துள்ளது. இது பாரதூரமான வீழ்ச்சியாகும்.

1991 இல் திறமை அடிப்படையில் 766 தமிழ் மாணவர்களும், மாவட்ட அடிப்படையில் 428 தமிழ் மாணவர்களும் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றனர்.

1992 இல் திறமை அடிப்படையில் தெரிவானோரின் எண்ணிக்கை 818 ஆகவும், மாவட்ட அடிப்படையில்தெரிவானோரின் எண்ணிக்கை 558 ஆகவும் இருந்தது.

ஆயினும் இந்த நிலைமை 1993 இல் தலைகீழாக மாறியிருந்தது.

திறமை அடிப்படையில் 296 தமிழ் மாணவர்களும், மாவட்ட அடிப்படையில் 401 தமிழ் மாணவர்களும் பல்கலைக்கழங்களுக்கு தெரிவானார்கள்.

வடக்கு - கிழக்கில் தொடரும் போர் நிலைமைகள், கல்வி பயில்வதற்கு பாதகமான சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. 1994 ஆம், 95 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர்களின் அனுமதி மேலும், மேலும் கவலைக்கிடமானதாகவே அமையும்.

1991 இல் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்ற தமிழ் மாணவர்கள் 1194 பேரில் 942 பேர் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

1992 இல் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்ற 1675 தமிழ் மாணவர்களில் 922 பேர் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

ஆனால் 1993 இல் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்ற 697 தமிழ் மாணவர்களில் 399 பேரே யாழ். மாவட்டத்தை சேர்ந்தவர்கள்.

யாழ். மாவட்டத்தை பொறுத்தவரை பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெறுவோரின் எண்ணிக்கை 60 சத வீதத்தால் வீழ்ச்சி அடைந்திருக்கிறது.

தமிழர்களின் உயர்கல்வியில் அக்கறை கொண்ட தலைமைத்துவங்கள் இந்த நிலையை சீர்தூக்கி பார்த்து தீவிரமாக சிந்தித்து தமிழ் மக்களின் பெருமை மிகு கல்விப் பாரம்பரியத்தை வீழ்ச்சியில் இருந்து மீட்டு எடுக்க ஆவன செய்யவேண்டும்—

இப்படி அவர் கேட்டுள்ளார். (இ-3)

## இன்று பெரிய வெள்ளி

சாவகச்சேரி, ஏப். 5

இயேசு கிறிஸ்து பாடுபட்டு மரித்து, அடக்கம் செய்யப்பட்ட பெரிய வெள்ளிக் கிழமை இன்று ஆகும்.

இதனை யொட்டி இன்று தேவாலயங்களில் விசேட ஆராதனைகள், பூசைகள் இடம் பெறுகின்றன. (இ)

## மருத்துவ கல்லூரி மாணவர் ஆர்ப்பாட்டம்

மருத்துவ உள்ளக பயிற்சி வழங்குவதில் ஏற்பட்டுள்ள கால தாமதத்தை நீக்குமாறு வலியுறுத்தி கொழும்பு மருத்துவக் கல்லூரி மாணவர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

சுலோகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்திய வண்ணம் சுமார் 300 மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மருத்துவ உள்ளக பயிற்சிக்கான தகுதிகாண் பட்டியல் வெளியானதும் —

பட்டியலில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இடம் பெறாததால் வழக்கு தொடரப்பட்டதும் —

அதையடுத்து நீதிமன்றம் அந்தப் பட்டியலை இடைநிறுத்தி வைத்துள்ளதும்— தெரிந்தவையே. (இ-3)

## தொலைக் கல்வி

மீசாலை, ஏப்.5

யாழ். மாவட்டத்தில் மூன்று தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் செயற்படும்.

யாழ். மாவட்டத்தில் செயற்பட்டு வந்த பத்து தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையங்ளின் பயிற்சி ஆசிரியர்களுக்கும் மூன்று நிலையங்களிலும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். கல்வி வலயம் இரண்டில் கர்வெட்டி, வட்டுக்கோட்டை ஆகிய நிலையங்களும், கல்வி வலயம் ஒன்றில் நல்லூர் நிலையமும் செயற்படவுள்ளன. (இ-11)

## படையில் சேர.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் மிக மோசமான பொருளாதார நிலைமைக்கு மத்தியிலும்—

இராணுவத்தில் சேரும்படி ஸ்ரீலங்கா அரசு திரும்பத் திரும்ப விடுக்கும் கோரிக்கைகளுக்கு மக்கள் செவி சாய்ப்பதாக இல்லை. ஒரு சிலரே படையில் சேர விரும்புகின்றார்கள்.

கடந்த ஜனவரியில் — யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதும்— இராணுவத்தில் சண்டையிடும் பிரிவில் உள்ள பத்தாயிரம் வெற்றிடங்களை நிரப்ப ஸ்ரீலங்கா அரசு முயற்சி எடுத்தது.

சிங்களப் பகுதிகள் முழுவதிலும் அமைக்கப்பட்ட — நேர்முகத் தேர்வுக்கான — பல நிலையங்களில் 7 ஆயிரம் பேரே சமுகமளித்தனர். அவர்களில் 3 ஆயிரத்து 500 பேர் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டனர். முன்னைய அனுபவங்களின்படி இவர்களில் சுமார் ஆயிரம் பேர் பயிற்சியின் போது விலகி விடுவர் என இராணுவம் கருதுகின்றது.

படைக்கு ஆட்சேர்ப்பதற்கான முதலாவது நேர்முகத் தேர்வு நடைபெற்று ஆறு வாரம் கழித்து மீண்டும் பத்தாயிரம் துருப்புகளைச் சேர்ப்பதற்கான இரண்டாவது நேர்முகத் தேர்வை அரசு நடத்தியது. ஆனால் அதற்கு சமுகமளித்தோர் மிக மிகக் குறைவாக இருந்தது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியவுடன் நடந்த நேர்முகத்தேர்வுக்கு ஓரளவேனும் ஆள்கள் சமுகம் தந்திருந்தனர், மக்களின் நல்லெண்ண உணர்வு, அண்மைக்கால வெற்றி ஆகியவை அதற்கு அப்போது காரணமாக இருந்தன. ஆனால் அந்த உணர்வு இப்போது இல்லாது போய் விட்டது.

யாழ்ப்பாணத்தை முற்றாகக் கைப்பற்றத் தவறியமை, யாழ்ப்பாணம் மீதான தாக்குதலின் பின் வடக்கு, கிழக்கில் புலிகளின் தாக்குதலில் பெருமளவு அரச துருப்புகள் — சுமார் 500 பேருக்கு மேல் — கொல்லப்பட்டமை ஆகியவை படையில் சேருவதில் இளைஞர்கள் விருப்பம் காட்டாமைக்கு முக்கிய காரணங்களாகும்.

ஐந்தாம் வகுப்பு வரை படித்திருந்தால் போதும்; நடத்தை குறித்து பொலீஸ் அறிக்கை மட்டுமே தேவையானது; மற்றைய அரசுத் துறை ஊழியர்களுடன் ஒப்பிடும் போது அதிகப்படியான சம்பளம்; உயர்ந்த ஓய்வூதியம்; இலவச சீருடை; விசேட உணவுப் பங்கீடு; பிற்காலத்தில் மற்றைய வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை — இப்படி பல கவர்ச்சிக்கர அறிவிப்புகள். அப்படியிருந்தும் இராணுவத்துக்கு ஆள் திரட்டும் முயற்சி பலனளிக்கவில்லை.

போருக்கு எதிரான சிங்கள மக்களின் கொந்தளிப்பு உணர்வு, விடுதலைப் புலிகளுக்கு எதிரான நீண்டகாலப் போரில் சிங்கள மக்களுக்கு ஏற்பட்ட ஆள்சேதம் ஆகியவற்றின் விளைவே பாதுகாப்புப் படையில் சேர்வதற்கு மக்கள் விருப்பம் காட்டாமைக்கான காரணம் என அரசியல், இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

இராணுவத்தில் சேர்ந்து கொள்ளுமாறு விடுக்கும் அழைப்புக் குறித்து சிங்கள இளைஞர்கள் பாராமுகமாக இருந்து அதனை நிராகரித்தாலும் —

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிப்பதே இத்தீவின் இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரும் ஒரே வழி என சில சிங்கள அரசியல் தலைவர்களும் பௌத்த மத பீடத்தின் ஒருபகுதியினரும் வலியுறுத்திவருகின்றனர் —என்று தெரிவித்தார். (உ.3)

## வெள்ளவத்தை கடற்கரை: காற்று வாங்கவும் தடை

கொழும்பு, ஏப். 5

வெள்ளவத்தை கடற்கரைக்கு காற்றுவாங்கச் செல்பவர்கள் மாலை 5 மணிக்குப் பின்னர் செல்ல பொலீஸார் என தம்மைக்கூறிக்கொள்ளும் சிவில் உடை தரித்த சிலர் தடைவிதிக்கிறார்களாம்.

அண்மைக் காலமாக முப்பதுக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு விடுதலையாகியுள்ளனர்.

இன்றைய சூழ்நிலையில் அதிக வெப்பம் காரணமாக காற்று வாங்கச் செல்வதற்கும் பொலிஸில் பதிந்து அத்தாட்சி பெறவேண்டிய நிலை இப்பகுதிகளில் காணப்படுவதாக கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது (இ-7)

## சாஸ்திரி கைது

கொழும்பு, ஏப் 5

''நாடோடி சாஸ்திரி'' யான தமிழர் ஒருவர் தங்காலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி ஹிதாலியத்தையைச் சேர்ந்த சுந்தரமுத்து யோகேஸ்வரன் (35 வயது) என்ற நாடோடிச் சாஸ்திரியே புலி இயக்கத்தை சேர்ந்தவர் என கைது செய்யப்பட்டார். (இ-3)

## வலிகாமம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ நடவடிக்கையை ஸ்ரீலங்காப் படைகள் கடந்த வெள்ளியன்று ஆரம்பித்தன.

மேஜர் ஜெனரல் ரோஹான் தலுவத்தயின் நெறிப்படுத்தலின் கீழ் 52 ஆம் படைப் பிரிவின் கட்டளை அதிகாரியான பிரிகேடியர் ஜி. ஏ. கருணதிலகவும் 53 ஆம் படைப் பிரிவின் கட்டளை அதிகாரியான பிரிகேடியர் ஜனக பெரேராவும் இந்த இராணுவ நடவடிக்கைக்குத் தலைமை வகிக்கிறார்கள்.

வலிகாமம் மேற்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதும் அப்பகுதியில் பாதுகாப்பு வலயத்தை ஏற்படுத்துவதுமே தற்போதைய இராணுவ நடவடிக்கையின் முக்கிய நோக்கம் என மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டதும் வலிகாமம் இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டுக்குக் கீழ் வந்துவிடும். அதன் பின்னர் வடமராட்சிப் பகுதியைக் கைப்பற்றுவதற்காக பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் எனவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

— இவ்வாறு அந்தப் பத்திரிகை குறிப்பிட்டது. (உ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பேரடெனியா இன்ஸ்ரிரியூட்

K. K. S. வீதி, கொக்குவில்.

ஆண்டு 1 — ஆண்டு 11 வரை வகுப்புக்கள் (05-04-1996) இன்று காலை 8-00 மணிக்கு ஆரம்பமாகும்.

வலிகாமம் புகழ் பூத்த ஆசிரியர் குழு

| | |
|---|---|
| கணிதம் — | திரு இரா. அருட்செல்வம் |
| | திரு. S. வாமதேவன் |
| விஞ்ஞானம் — | திரு. இரா. செல்வவடிவேல் |
| | திரு. R. இராஜா |
| சமூகக்கல்வி — | திரு. அ. குணலிங்கம் |
| | திரு. இா. நித்தியானந்தம் |
| ஆங்கிலம் — | திரு. S. சந்திரமௌலி |
| | திரு. கிருபா |
| தமிழ் ] — | திரு. ஞான.திருக்கேதீஸ்வரன் |
| சமயம் | திரு. தர்மா |
| வர்த்தகம் — | திரு. K. மகேஸ்வரன் |
| | திரு. ஸ்ரீஸ்குமார் |

ஆண்டு 4, 5 க்கான புலமைப் பரிசில் வகுப்புக்கான

தமிழ் / கணிதம் ] திரு. சரா. புவனேஸ்

✶ இடம்: மீசாலைச் சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் அல்லாரை வீதியில் (இரண்டாவது தண்ணீர்ப் பானைக்கு அருகில்)

✶ குறிப்பு: எமது நிறுவனத்தின் சகல ஆசிரியர்களையும் நாளை காலை 8-00 மணிக்கு சமுகம் அளிக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

✶ அனுமதி பெற்ற அனைத்து மாணவர்களும் அனுமதி பெற இருக்கின்ற மாணவர்களும் நாளை காலை 8 மணிக்கு சமுகமளிக்கவும்.

- நிர்வாகி

[41416]


# கிளிநொச்சி உணவு நிலைமை; தொண்டர் நிறுவனங்கள் கவலை

கிளிநொச்சி, ஏப். 5

வன்னிப் பெரு நிலப் பரப்பில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

கிளிநொச்சி மாவட்ட செயலக மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அத்தியாவசிய சேவைகள் கூட்டத்தில் இது குறித்து அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கு மேலும் தாமதமாகும் பட்சத்தில், உணவு நெருக்கடி மோசமடையும் என்றும் —

உணவுப் பொருள்களை விரைவாக எடுத்து வருவதற்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் இப் பிரதிநிதிகள் அக் கூட்டத்தில் கேட்டுக் கொண்டனர். (இ-124)

## இப்படியும் நடக்கிறது

மணிலா; ஏப். 5

இந்தியாவில் தற்போது தேர்தல் பிரசாரம் சூடு பிடிக்க ஆரம்பித்திருக்கிறதல்லவா?

வாக்காளர்களைக் கவருவதற்காக வேட்பாளர்கள் பல்வேறு விதமான தந்திரங்களைக் கையாளுகிறார்கள்.

பீஹார் மாநிலத்தின் தலைநகரான பாட்னாவில் பீஹார் முதல்வரும் ஜனதாதள் கட்சியின் தலைவருமான லலுபிரசாத்யாதவ் தேர்தல் பிரசாரத்துக்காக கிளிகளைப் பயன்படுத்த உள்ளார். நூறு பச்சைக்கிளிகளை அவர்பிடித்து வைத்துள்ளார். இந்தக் கிளிகளுக்கு ''ஜனதாதள் கட்சிக்கு வாக்களியுங்கள்'', ''ஜனதாதள் கட்சிக்கு வாக்களியுங்கள், என்று சொல்லும்படி அவர் பயிற்சி அளித்துள்ளார்.

இந்தக்கிளிகள் பாட்னாவில் தேர்தல் ' பிரசாரத்துக்காகப் பறக்கவிடப்பட உள்ளன என்று 'ஏசியா வீக்' சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது. (இ-8)

தபாலகம்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரதம தபாலதிபர் திரு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

பிரதம தபாலகம் இயங்காமையால் தமது உறவினர்களது வெளிநாட்டுக் கடிதங்களையும், பேராதனை பல்கலைக்கழக இரண்டாம் படிவத்தினையும் பெற்றுக் கொள்ள ஆவலுடன் வந்த அனைவரும் ஏமாற்றத்துடனும் விசனத்துடனும் திரும்பிச் செல்வதைக் காணமுடிந்தது. (அ-8)


## தவறிவிட்டது

ELF 350 வாகன மோட்டர் (Start Mortor) 31 - 3 - 96 ஞாயிற்றுக்கிழமை அன்று வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கும், கொடிகாமம் - பருத்தித்துறை வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் கீழ் உள்ள முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் தரப்படும்.

லிங்கம் கூல் பார்
நகுலன் வீதி, மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

லிங்கம் குளிர்க்களி வாகனம்,
சாவகச்சேரி.

(41331)



# திறப்பு விழா

அன்பர்கள், ஆதரவாளர்கள், வழமையாளர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க



# சோழன் வாணிபத்தினர்

இன்று 05-04-96 ஆம் நாள்
மு. ப. 10 மணிக்கு

மாங்குளத்தில் தங்களின் புதிய பணியினை தொடங்குகின்றனர்.

★ அத்தியாவசியப் பொருள்கள்
★ அழகு சாதனப் பொருள்கள்
★ ஆடம்பரப் பொருள்கள்
★ உள்ளூர் உற்பத்திப்பொருள்கள்
★ பாடசாலை உபகரணங்கள்
★ அடுக்கணிகள்

அனைத்தினையும் ஒரே கூரையின் கீழ்

தரங்குன்றாமல் நியாய விலையில் பெற்றுக் கொள்ள உடன் நாடவேண்டிய இடம்

# சோழன் பல்பொருள் வாணிபம்

துணுக்காய் வீதி, மாங்குளம்.

(சி/4164)


## மரண அறிவித்தல்கள்

### பரஞ்சோதி கந்தசாமி

இருபாலையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு C. M. S லேனை வசிப்பிடமாகவும் கொண்ட பரஞ்சோதி கந்தசாமி சவூதியில் 2 - 4 - 96 இல் காலமாகிவிட்டார்.

இவர் அழகம்மாவின் அன்புக் கணவரும், ரூசாந்தன், பிரமிளா, கேமலதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேஸ்வரி, சிவசுப்பிரமணியம், மங்கையர்க்கரசி, மனோன்மணி, செல்வரட்ணம், குணசீலன், ராசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
அழகம்மா
(மனைவி)

தற்போதைய முகவரி:
திருமதி கந்தசாமி,
மே/பா க. இரத்தினசிங்கம்,
அண்ணாகுடில்,
சாமியன் அரசடி,
கரவெட்டி.

(40411)

### வீரசிங்கம் தம்பிராசா

கட்டுவன், மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த வீரசிங்கம் தம்பிராசா அவர்கள் நேற்றுக் காலமானார்.

இவர் மாணிக்கத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்வராசா, நல்லம்மா, தவமணி, நாகம்மா, தருமராசா, வேலாயுதம், கந்தசாமி (ரெலிகொம்—கொழும்பு), ஜெயராசா, தவராஜா (ஆசிரியர் மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் தந்தையாரும், குலேந்திரன், காலஞ்சென்ற அரியராஜசிங்கம், மற்றும் யோகராசா (அஜந்தா காமென்ஸ்-நெல்லியடி), மோகனாதேவி, ஸ்ரீரஜனி, சுந்தரராணி (ரெலிகொம்—கொழும்பு), சிவசந்திரா ஆகியோரின் மாமனாரும், ஷகிலா, சதீஸன், மாலதி, கோமதி (கயாழினி), பாமதி, சபேசன், வளர்மதி, ஜதீபன், கஸ்தூரி, தனுஜன் ஆகியோரின் பேரனும், ஆறுமுகம் (நாயன்மார்க்கட்டு), அன்னம்மா (காங்கேசன்துறை), காலஞ்சென்ற சதாசிவம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நெல்லியடி இல்லத்தில் இன்று (5 - 4 - 96) பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
யோகராசா நாகம்கா
(மகள்)

அஜந்தா காமென்ஸ்,
(தமிழீழ வைப்பகம் முன்பாக),
நெல்லியடி, கரவெட்டி.

(4141)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 05-04-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org